


கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், மீனவர் குறை தீர்க்கும் நாள் கூட்டம், மாவட்ட ஆட்சியர் அலுவலக நாஞ்சில் கூட்டரங்கில் இன்று (23.09.2016) நடைபெற்றது. துணை இயக்குநர் (மீன்வளத்துறை) திரு. லாமக் ஜெயக்குமார், உதவி இயக்குநர் திரு. எஸ். ரூபர்ட் ஜோதி ஆகியோர் உடனுள்ளனர்.

செ.வெ.எண்: 670 /2016 நாள்: 23.09.2016

**கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா. சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், மீனவர் குறைதீர்க்கும் நாள் கூட்டம் இன்று (23.09.2016) நடைபெற்றது.**

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், மீனவர் குறை தீர்க்கும் நாள் கூட்டம், மாவட்ட ஆட்சியர் அலுவலக நாஞ்சில் கூட்டரங்கில் இன்று (23.09.2016) நடைபெற்றது.

மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் தலைமையில் நடைபெறும் மீனவர் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில், மீனவ மக்களிடமிருந்து கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டு, குறைகள் தீர்க்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், நலத்திட்ட உதவிகளும் வழங்கப்பட்டு வருகிறது.

கூட்டத்தில் கடந்த மாதத்தில் மீனவ மக்களிடமிருந்து பெறப்பட்ட மனுக்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து துறைவாரியான பதில்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் முன்னிலையில் வாசிக்கப்பட்டது. இதில் பிற துறையை சார்ந்த 29 மனுக்களும், மீன்வளத்துறையை சார்ந்த 10 மனுக்களும், தனிநபர் மனுக்கள் 159 என மொத்தம் 198 மனுக்கள் மீது பதில்கள் வாசிக்கப்பட்டது.

இராஜாக்கமங்கலம் ஊராட்சியில் மாதா காலனி தெருவில் உள்ள செடிகளை அகற்றி அலங்கார தரை ஓடுகள் பதிக்க, சிறப்பு நிதி ஒதுக்கீடு கிடைக்கப்பெற்றதும் பணிகள் மேற்கொள்ளப்படும் எனவும், தேங்காப்பட்டணம் மீன்பிடித் துறைமுகத்தில் நடைபெறும் மேற்குப் பகுதி பணிகளான படகு அணையும் மேடை மற்றும் கரையோர கட்டிட வசதிகள் வேகமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மேலும் பணிகளை துரிதப்படுத்த ஆவன செய்யப்படும் என்ற விபரம் தெரிவிக்கப்படுகிறது எனவும், தமிழ்நாடு அரசு மீன்துறையின் மூலம் மா. சிங்காரவேலர் நினைவு மீனவர் தொகுப்பு வீடுகள் திட்டத்தில் கட்டி வழங்கப்பட்ட வீடுகளுக்கு பட்டா வழங்குவது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்ற விபரமும், நிர்மலா, கோவில் விளாகம், தூத்தூர் என்பவர் மாற்று திறனாளி அடையாள அட்டை பெற்று விண்ணப்பிக்கும் நேர்வில் மனுதாரருக்கு உதவித்தொகை வழங்கப்படும் எனவும், பழைய மருத்துவமனை அருகில், தூத்தூர் என்ற இடத்தை சார்ந்த சூசம்மாள் மற்றும் மெல்சியாஸ் என்பவர் வறிய நிலையில் வாழ்ந்து வருகிறார். எனவே அவருக்கு உதவித்தொகை வழங்கப்படும் எனவும், முட்டம் என்ற இடத்தை சார்ந்த அந்தோணி என்பவருக்கு முதியோர் உதவித்தொகை அனுமதிக்கப்படும் எனவும், ஜார்ஜ், அந்தோணியார் தெரு, கடியப்பட்டணம் என்பவருக்கு தகுதியின் அடிப்படையில் முதியோர் உதவித்தொகை அனுமதிக்கப்படும் எனவும், இணையம் என்ற இடத்தை சார்ந்த மரியம்மாள் என்பவர் வறிய நிலையில் வாழ்ந்து வருவதால் அவருக்கு உதவித்தொகை வழங்கலாம் எனவும் தெரிவிக்கப்பட்டது.

பின்னர் மீனவர் மக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா. சவான் இ.ஆ.ப., அவர்கள் பெற்றுக் கொண்டார்.

கூட்டத்தில் துணை இயக்குநர் (மீன்வளத்துறை) திரு. லாமக் ஜெயக்குமார், உதவி இயக்குநர் திரு. எஸ். ரூபர்ட் ஜோதி உள்ளிட்ட அரசு அலுவலர்கள், மீனவ சங்க உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.